Office for the Prevention of Hate Crimes

# வெறுப்புணர்வுக் குற்றம் என்றால் என்ன?

வெறுப்புணர்வுக் குற்றம் என்பது ஒரு தனிநபரின் குணாதிசயங்களுக்கு எதிராகப் பாரபட்சமாக, முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ உந்தப்பட்டு மேற்கொள்ளப்படும் ஒரு குற்றம் ஆகும். நியூயார்க் மாநிலச் சட்டத்தின்படி, ஒரு சம்பவத்தை வெறுப்புணர்வுக் குற்றம் என வகைப்படுத்துவதற்கு அங்கு அடிப்படையாகவே ஒரு குற்றம் நிகழ்ந்திருக்க வேண்டும். இதன் அர்த்தம் என்னவென்றால், முதலில் அங்கு ஒரு குற்றம் நடந்திருப்பதை அதிகாரிகள் உறுதிப்படுத்த வேண்டும். குற்றமானது பாரபட்சமாக உந்தப்பட்டு நடந்திருப்பதாக உறுதி செய்யப்பட்டால், பிறகு அசல் குற்றச்சாட்டுடன் வெறுப்புணர்வுக் குற்றத்திற்கான குற்றச்சாட்டுகளும் சேர்க்கப்படலாம்.

எந்த ஒரு குற்றமும் அதனால் பாதிக்கப்படுபவரிடம் ஒரு எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துகிறது மற்றும் வெறுப்புணர்வுக் குற்றங்கள் பாதிக்கப்பட்டவரை ஆழமாகவும், உணர்வுப்பூர்வமாகவும் பாதிக்கிறது மற்றும் இதன் பாதிப்பு அதிகமானது - பாதிக்கப்பட்டவரைப் போன்ற குணாதிசயங்களைக் கொண்ட மற்றவர்களுக்கு இது ஒரு பயத்தையும், சமூகத்தில் அமைதியின்மையையும் ஏற்படுத்துகிறது, எனவே தான் இதற்கு கூடுதல் தண்டனைகள் வழங்கப்படுகின்றன. பலவகையான அடிப்படையான குற்றங்கள் இங்கு உள்ளன, அவை பாரபட்சமான நோக்கத்துடன் மேற்கொள்ளப்படும் போது அவை வெறுப்புணர்வால் நிகழ்ந்த குற்றங்களாக கருதப்படுகின்றன, அவற்றில் உடல் ரீதியாகத் தாக்குவது, வாய்வார்த்தைகளால் அச்சுறுத்துவது, கொள்ளையடிப்பது, திருடுவது மற்றும் பொதுச்சுவரில் எழுதுவது மற்றும் படங்கள் வரைவது போன்ற உடமைகளைச் சேதம் செய்வது போன்றவை உள்ளடங்கும்.

துன்புறுத்தும், எரிச்சலூட்டும், அச்சுறுத்தும் அல்லது எச்சரிக்கை செய்யும் நோக்கத்துடன் - வரலாற்று ரீதியாக வெறுப்புணர்வின் வெளிப்பாடுகளாக கருதப்படும் - ஒரு ஸ்வஸ்திகா அல்லது தூக்குக் கயிற்றை யாரேனும் ஒருவர் வெளிப்படையாக மற்றவர்கள் பார்வையில் படும்படியாக வைத்தால் அவர் மீது மோசமான துன்புறுத்துதல் தொடர்பான குற்றமும் சுமத்தப்படும் என்று நியூயார்க் சட்டம் குறிப்பாகத் தெரிவிக்கிறது.

## வெறுப்புணர்வால் நிகழும் குற்றங்களுக்கான உதாரணங்கள்

- ✔ இரயிலில் ஒரு பயணி, "ஓரின சேர்க்கையாளர்களை நான் வெறுக்கிறேன்" என்று கூறுகிறார் மேலும் கைகளைக் கோர்த்துக்கொண்டு இருக்கும் ஓர் ஓரினச் சேர்க்கை ஜோடியை அடிக்க போவதாகப் பயமுறுத்துகிறார்.
- ✔ ஒரு பதின்ம வயது குழுவினர் ஒரு கட்டிடச் சுவரில் ஸ்வஸ்திகா சின்னத்தை வரைகிறார்கள் அல்லது ஒரு மரத்தில் தூக்குக் கயிற்றைத் தொங்க விடுகிறார்கள்.
- ✔ வழியில் சென்று கொண்டிருக்கும் ஒரு நபர் மற்ற ஒருவரின் முகத்தில் எச்சில் துப்பி, "ஆசியர்கள் நீங்கள் தான் கொரோனா வைரஸைப் பரப்புகிறீர்கள்!" என்று சத்தம் போடுகிறார்.

## நியூயார்க்கின் வெறுப்புணர்வுக் குற்றத்திற்கான சட்டத்தின் கீழ் எந்தக் குழுக்கள் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன?

ஒரு குற்றம் பாரபட்சமாக தூண்டப்பட்டதா என்பதைத் தீர்மானிக்க, நியூயார்க் சட்டம் பின்வரும் குறிப்புகளைக் கருத்தில் கொள்கிறது:

- இனம் அல்லது நிறம்
- மதம் அல்லது மத நடைமுறைகள்
- பரம்பரை அல்லது பூர்வீகம்
- பாலினம்
- பாலியல் நாட்டம்
- பாலின அடையாளம் அல்லது வெளிப்பாடு
- உடல் ஊனம்
- வயது

## அடிப்படையான குற்றம் நிகழவில்லை எனில் என்ன செய்ய வேண்டும்?

அடிப்படையான ஒரு குற்றம் நிகழவில்லை என்றாலும் பாரபட்சம் மற்றும் வெறுப்புணர்வு காரணமாகவும் ஒருவர் பாதிக்கப்படக்கூடும். உங்கள் அடையாளத்தின் அடிப்படையில் ஒருவர் வாய் வார்த்தைகளால் உங்களைத் துன்புறுத்தும் போது அல்லது உங்களிடம் பாகுபாடு காட்டும் போது, அந்தச் சம்பவத்தில் உடல் ரீதியான தாக்குதல், தாக்கப்படுவதற்கான அச்சுறுத்தல் அல்லது பொருள் சேதம் எதுவும் நடைபெறவில்லை என்றபோதிலும் அந்தச் சம்பவம் பாரபட்சமான சம்பவம் என்றே கருதப்படுகிறது.

பாரபட்சமான சம்பவங்கள் பாகுபாடு காட்டப்படுவதற்கான உதாரணங்களாக தீவிரமானக் கண்ணோட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படுகின்றன, ஆனால் அவை குற்றச் செயல்களாக இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. சில பாரபட்சமான சம்பவங்கள், அரசியல் அமைப்பின் பேச்சுரிமைச் சட்டத்தின் அடிப்படையில் பாதுகாக்கப்படக்கூடும். நியூயார்க் நகரத்தில் மற்ற சம்பவங்களுக்கு NYC மனித உரிமை சட்டத்தின் கீழ் சிவில் அபராதங்கள் விதிக்கப்படலாம், அதை NYC மனித உரிமைகள் ஆணையம் நிர்வகிக்கிறது.

## பாரபட்சமான சம்பவங்களின் உதாரணங்கள்

- ✔ ஒரு தெருவில் லத்தீன் இன மனிதர் ஒருவருக்கு அருகில் நடந்து செல்லும் யாரேனும் ஒருவர், அவரைப் பார்த்து "நான் மெக்ஸிக்கோ நாட்டினரை வெறுக்கிறேன்", மேலும் "நீங்கள் உங்கள் நாட்டிற்குத் திரும்ப செல்லுங்கள்!" எனச் சத்தம் போடுகிறார்.
- ✔ ஒரு பதின்ம வயது குழுவினர் பதின்ம வயதில் இருக்கும் ஒரு கறுப்பின நபரை "N" என்ற வார்த்தையை பயன்படுத்தி அழைக்கின்றனர்.
- ✔ தலைப்பாகை அணிந்து வரும் ஒரு வாடிக்கையாளரை பார்த்து ஓர் உணவக உரிமையாளர், "முஸ்லீம்கள் இங்கு வரவேற்கப்படுவதில்லை" என்று கூறுகிறார்.

# …நான் என்ன செய்ய வேண்டும்?

## ஸ்வஸ்திகா போன்ற வெறுப்புணர்வுச் சின்னங்கள் அல்லது வெறுப்புணர்வு வார்த்தைகள் உள்ளடங்கிய சுவரெழுத்துக்களை அல்லது படங்களை நான் பார்க்க நேர்ந்தால்?

நியூயார்க்கில் பொதுச் சுவற்றில் வரைவது அல்லது எழுதுவது குற்றமாகும். மேலும் அந்தப் படத்தில் அல்லது எழுத்துக்களில் வெறுப்புணர்வு வார்த்தைகள் அல்லது வெறுப்புணர்வுச் சின்னங்கள் இருந்தால் அது வெறுப்புணர்வுக் குற்றமாகக் கருதப்படும். ஸ்வஸ்திகா மற்றும் தூக்குக் கயிறுகள் ஆகியவை மிகவும் பொதுவாகப் பயன்படுத்தப்படும் வெறுப்புணர்வுச் சின்னங்கள் ஆகும்.

பொதுச் சுவற்றில் வெறுப்புணர்வு வார்த்தைகள் அல்லது வெறுப்புணர்வுச் சின்னங்களை நீங்கள் பார்க்க நேர்ந்தால், 911 என்ற எண்ணை அழைத்து “வெறுப்புணர்வுக் குற்றம்” என்று தெரிவியுங்கள். அந்த வார்த்தைகளை அல்லது சின்னங்களை ஒரு புகைப்படமாக எடுத்து சட்ட அமலாக்கத்துறைக்கு அனுப்பினால் உதவியாக இருக்கும்.

## விளக்கு கம்பத்தில் வெள்ளையின மேலாதிக்கக் குழுவை ஊக்குவிக்கும் ஸ்டிக்கர்களை அல்லது துண்டுப் பிரசுரங்களை நான் பார்க்க நேர்ந்தால்?

ஸ்டிக்கர்கள், துண்டுப் பிரசுரங்கள் மற்றும் சுவரொட்டிகள் முதல் சட்டத்திருத்தத்தால் பாதுகாக்கப்பட்டிருந்தாலும் கூட மற்றும் அவை வெறுப்புணர்வுக் குற்றங்களாகக் கருதப்படாவிட்டாலும் கூட, பாரபட்சமான அல்லது வெறுப்புணர்வுச் செய்திகள் குறித்து புகாரளிப்பது முக்கியமானதாகும்.

அந்தத் துண்டுப் பிரசுரங்களில் ஸ்வஸ்திகா அல்லது தூக்குக்கயிறு போன்ற குறிப்பிட்ட படங்கள் இடம் பெற்றிருந்தால், அந்தத் துண்டுப் பிரசுரங்களை வினியோகம் செய்த நபர்களின் குற்றங்கள் அதிகரிக்கக்கூடும் மற்றும் அது குறித்து நீங்கள் உள்ளூர் அலுவலகத்தில் புகார் செய்ய வேண்டும்.

## பாரபட்சமான கருத்துக்களைத் தெரிவித்து என்னை யாராவது உடல் ரீதியாகவும் துன்புறுத்தினால்?

தொடாமல் உடல் ரீதியாகத் துன்புறுத்தினாலும் அது குற்றமாகக் கருதப்படுகிறது. யாரேனும் ஒருவர் பாரபட்சமான கருத்துக்களைத் தெரிவிப்பதோடு உடல் ரீதியாகவும் துன்புறுத்தினால், அதை உடனடியாக வெறுப்புணர்வுக் குற்றமாக வகைப்படுத்தலாம்.

யாரேனும் ஒருவர் ஒரு நபரை உடல் ரீதியாகத் தாக்குவதற்கு முன்பு “உனது ஆசிய முகத்தில் ஒரு குத்து விடப்போகிறேன்” என்று சத்தம் போட்டால், அது ஒரு வெறுப்புணர்வுக் குற்றமாக கருதப்படக்கூடும் மற்றும் அந்தச் சம்பவம் குறித்து நீங்கள் 911 என்ற எண்ணை அழைத்து காவல்துறையிடம் புகார் அளிக்க வேண்டும் அல்லது உள்ளூர் அலுவலகத்திற்குச் சென்று அது குறித்துப் புகார் அளிக்க வேண்டும்.

## யாரேனும் ஒருவர் எனது அடையாளத்தை குறித்து வாய் வார்த்தைகளால் என்னைத் துன்புறுத்துகிறார், ஆனால் அவர் என்னை அச்சுறுத்தவோ அல்லது தொடவோ இல்லை…

உங்கள் இனம், நாட்டினம், மதம், பாலினம், பாலியல் நாட்டம், அல்லது பாலின அடையாளம், உடல் ஊனம் அல்லது வேறு ஏதேனும் பாதுகாக்கப்பட்ட வகைப்பாடுகள் காரணமாக பாகுபாடு காட்டப்படுகிறது என்று கருதக்கூடிய வகையில் உங்களை ஒருவர் துன்புறுத்தினால், நீங்கள் 311 என்ற எண்ணை அழைத்து “மனித உரிமை” என்று சொல்ல வேண்டும் அல்லது NYC மனித உரிமை ஆணையத்தை (CCHR) அழைத்து பாரபட்சமாக நடத்தப்பட்ட சம்பவத்தைப் பற்றி புகார் செய்ய வேண்டும்.

துன்புறுத்தலானது பாகுபாட்டின் அடிப்படையிலானது என்றோ அல்லது உங்கள் அடையாளத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது என்றோ உங்களுக்கு நிச்சயமாகத் தெரியவில்லை என்றாலும், நீங்கள் CCHR -ஐ அழைக்கலாம் அல்லது அதற்கு மின்னஞ்சல் அனுப்பலாம். உங்கள் உரிமைகளைப் புரிந்துகொள்ளவும், ஒரு புகாரைத் தாக்கல் செய்யவும் அவர்கள் உங்களுக்கு உதவி செய்வார்கள்.

## வெறுப்புணர்வால் நிகழ்ந்த ஒரு குற்றத்தையோ அல்லது ஒரு பாரபட்சமான சம்பவத்தையோ நான் அனுபவித்தேனா என்று எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை எனில்?

உங்களை யாராவது உடல் ரீதியாகத் தாக்கினாலோ அல்லது தாக்கப்போவதாக மிரட்டினாலோ, நீங்கள் 911 என்ற எண்ணை அழைக்க வேண்டும். உங்களுக்கு எந்த எண்ணை அழைக்க வேண்டும் என்று தெரியவில்லை என்றால், நீங்கள் 311 அல்லது 911 என்ற எண்ணையோ அல்லது இவையிரண்டையுமே அழைக்கலாம்.

நீங்கள் 311 அல்லது 911 ஆகிய இரண்டு எண்களில் எந்த எண்ணை அழைத்தாலும் உங்கள் புகார் உரிய இடத்திற்கு அனுப்பப்படும். சம்பவம் குறித்து புகார் செய்வது தான் முக்கியம், எந்த எண்ணைப் பயன்படுத்துகிறோம் என்பது முக்கியமில்லை.

### என்ன நடந்தது?

| பாரபட்சமான சம்பவம் | வெறுப்புணர்வுக் குற்றம் |
|---|---|

### நான் என்ன செய்ய வேண்டும்?

| பாரபட்சமான சம்பவம் | வெறுப்புணர்வுக் குற்றம் |
|---|---|
| 311 என்ற இலக்கத்தை அழைத்து “மனித உரிமைகள்” என்று சொல்ல வேண்டும் அல்லது CCHR -இன் இணையதளத்தில் உள்ள பாகுபாடு காட்டப்படுதல் தொடர்பான அறிக்கையைப் பூர்த்தி செய்ய வேண்டும். | 911 என்ற இலக்கத்தை அழைத்து “வெறுப்புணர்வுக் குற்றம்” என்று சொல்ல வேண்டும் அல்லது உள்ளூர் காவல் நிலையத்தை அழைக்க வேண்டும் |

### அடுத்து என்ன நடக்கும்?

| பாரபட்சமான சம்பவம் | வெறுப்புணர்வுக் குற்றம் |
|---|---|
| CCHR ஊழியருடன் நீங்கள் இணைக்கப்படுவீர்கள், அவர் உங்கள் புகாரை விசாரிப்பார் அல்லது ஒரு புகாரைத் தாக்கல் செய்ய உங்களுக்கு உதவி செய்வார் | நீங்கள் ஓர் ஆப்பரேட்டருடன் இனைக்கப்படுவீர்கள், அவர் உங்களிடம் விவரங்களை கேட்டு, விசாரணை செய்ய காவல்துறையை அனுப்ப வேண்டுமா என்பதை முடிவு செய்வார். மொழி சார்ந்த உதவிகள் கிடைக்கப்பெறுகின்றன மற்றும் உங்களது குடியுரிமை நிலை பற்றியக் கேள்வி உங்களிடம் கேட்கப்படமாட்டாது. |